ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொடுமுடி வட்டம், சிவகிரி பேரூராட்சி, 14வது வார்டு மாரப்பம்பாளையம் காலனி பகுதியில் தார்சாலை அமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 7.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பூமிபூஜை செய்தல் நிகழ்வு நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் சி.சரஸ்வதி பணிகளை தொடங்கி வைத்தார். இதில் பாரதீய ஜனதா கட்சியின் கொடுமுடி மேற்கு ஒன்றிய தலைவர் ரமேஷ் பொன்வேல், முன்னாள் ஒன்றிய தலைவர் முருகானந்தம், ஒன்றிய பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் மாநில நிர்வாகிகள் கலைச்செல்வன், பாலக்குமார், முன்னாள் மாவட்ட நிர்வாகி சிவசங்கர் மற்றும் கொடுமுடி மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் நாச்சிமுத்து, சங்கர், சண்முகராசு, குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி, சட்டையன்புதூர், செங்குந்தர் பாவடி திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பில், சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு வளையல் அணிவித்து, வளைகாப்பு சீர்வரிசைப் பொருட்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார். உடன் கலெக்டர் உமா, சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

127வது மலர் காட்சியை முன்னிட்டு

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மலர் நாற்றுகள் நடும் பணி தொடக்கம்

நீலகிரி, மார்ச் 16– நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மே மாதம் நடைபெற இருக்கும் 127வது மலர் காட்சியை முன்னிட்டு இன்காமேரிகோல்டு, பிரன்ச் மேரிகோல்டு போன்ற மலர் நாற்றுகள் நடும் பணியினை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:– உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மே மாதம் நடைபெற இருக்கும் 127வது மலர் காட்சியை முன்னிட்டு பூங்காவின் பல்வேறு பகுதிகளில் மலர் பாத்திகள் அமைத்து, பல வண்ண மலர்ச் செடிகள் நடவு செய்ய விரிவான ஏற்பாடுகள் தோட்டக்கலைத்துறையின் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு, இன்காமேரிகோல்டு, பிரன்ச் மேரிகோல்டு போன்ற மலர் நாற்றுகள் நடும் பணி துவக்கி வைக்கப்பட்டது. இந்தாண்டு சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஜெரேனியம், சைக்லமன், பால்சம் மற்றும் பல புதிய ரக ஆர்னமெண்டல்கேல், ஓரியண்டல்லில்லி, ஆசியாடிக்லில்லி, டேலியாக்கள் மற்றும் பிகோனியா, கேன்டீடப்ட், பிரன்ச் மேரிகோல்டு, பேன்சி, பெட்டுனியா, பிளாக்ஸ், ஜினியா, ஸ்டாக், வெர்பினா, சன்பிளவர், சிலோசியா, ஆன்டிரைனம், டயான்தஸ், ஆஸ்டர், ஜெர்பரா, க்ரைசாந்திமம், டெல்பினியம், சால்வியா, ஆந்தூரியம் போன்ற 275 வகையான விதைகள் மற்றும் செடிகள் ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்டு மலர்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில் 7.5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

நடவு செய்யப்படும் மலர் நாற்றுகளுக்கு பனியின் தாக்கம் ஏற்படாத வண்ணம் கோத்தகிரி மிலார் செடிகளைக் கொண்டு பாதுகாப்பு செய்யப்படும். இவ்வாண்டு எதிர்வரும் மலர்க் காட்சியினையொட்டி மலர்க்காட்சி மாடம் மற்றும் கண்ணாடி மாளிகையில் 40,000 வண்ண மலர்த் தொட்டிச் செடிகள் அடுக்கி வைக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என கலெக்டர் தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஸ், உதவி இயக்குநர்கள் பைசல் (உதகை தாவரவியல் பூங்கா), விஜியலட்சுமி (குன்னூர் சிம் பூங்கா), ஐஸ்வர்யா (கோத்தகிரி நேரு பூங்கா), ஜெயந்தி (நடவு பொருட்கள்), தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மற்றும் தோட்டப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கேஎம்சிஎச் மருத்துவமனை சார்பில் மருத்துவ இயற்பியலாளர்கள் மாநாடு

கோவை, மார்ச் 16– **இந்திய மருத்துவ இயற்பியலாளர்கள் சங்கத்தின் ஆண்டு மாநாடு – 'ஆம்பிகான் 2024' தமிழ்நாடு புதுச்சேரி பிரிவு – தென் இந்தியா முழுவதிலுமிருந்து 250க்கும் மேற்பட்ட மருத்துவ இயற்பியலாளர்களை ஒன்றிணைத்து வெற்றிகரமாக நடைபெற்றது.**

இந்த மாநாடு நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வது, துறைசார்ந்த வளர்ச்சி மேம்படுத்துவது மற்றும் மருத்துவ இயற்பியலில் சமீபத்திய முன்னேற்றங்கள் பற்றிய விவாதங்களுக்கு ஒரு முக்கிய தளமாக விளங்கியது.

கோவை அவினாசி ரோட்டில் உள்ள கேஎம்சிஎச் மருத்துவமனையில் நேற்று 15ந் தேதி நடத்தப்பட்ட இந்த ஒரு நாள் மாநாட்டில், கதிர்வீச்சு சிகிச்சை, இமேஜிங் தொழில்நுட்பங்கள், கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் புற்றுநோய் சிகிச்சையில் தர உறுதிப்பாடு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய நிபுணர் தலைமையிலான அமர்வுகள், குழு விவாதங்கள் மற்றும் மின்னணு போஸ்டர் அமர்வுகள் இடம்பெற்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கலந்து கொண்ட புகழ்பெற்ற நிபுணர்கள் இந்தத் துறையில் வளர்ந்து வரும் முன்னேற்றங்கள் மற்றும் சவால்கள் பற்றிய தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த மாநாட்டிற்கு கேஎம்சிஎச் தலைவர் நல்லா ஜி.பழனிசாமி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் தவமணி பழனிசாமி, செயல் இயக்குனர் அருண் பழனிசாமி, மாநாடு ஏற்பாட்டு தலைவர் சுப்பிரமணியம், இந்திய மருத்துவ இயற்பியலாளர்கள் சங்கம் டாக்டர் பரணிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புற்றுநோய் மருத்துவம் மற்றும் சிகிச்சைகளின் வெளிப்பாடுகளை மேம்படுத்துவதில் மருத்துவ இயற்பியலின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை இந்த மாநாடு அடிக்கோடிட்டுக் காட்டியது.

மருத்துவ இயற்பியலாளர்கள் தொழில் துறை தலைவர்களுடன் கூடி ஆலோசிப்பதற்கும், ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், மருத்துவ இமேஜிங் மற்றும் கதிர்வீச்சு சிகிச்சையில் உள்ள சிக்கலான சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை ஆராய்வதற்கும் இந்த மாநாடு ஓர் அரிய வாய்ப்பை வழங்கியது.

இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற பங்களித்த அனைத்து பங்கேற்பாளர்கள், மற்றும் ஆதரவு நிறுவனங்களுக்கும் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி தனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

சத்தியமங்கலத்தில் நடைபெற்ற மனுநீதி முகாமில் 109 பேருக்கு ரூ.12 லட்சத்தில் நலத்திட்ட உதவி

கலெக்டர் ராஜகோபால்சுன்கரா வழங்கினார்

ஈரோடு, மார்ச் 16– ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் குத்தியாலத்தூர் உள்வட்டம், குத்தியாலத்தூர் கிராமம், கடம்பூர் டான் போஸ்கோ மாணவர் விடுதி வளாகத்தில் நடைபெற்ற மனுநீதி முகாமில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா 109 பேருக்கு ரூ.11.80 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக, கலெக்டர் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கிடும் வகையில் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவம், கால்நடைத் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, மகளிர் சுய உதவிக்குழு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து, இம்முகாமில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கலெக்டர் இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இம்முகாமில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு, வேளாண்மை இணை இயக்குநர் மீ.தமிழ்செல்வி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் மரகதமணி, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை செயலாளர் சாவித்திரி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) அருணா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், மாவட்ட சுகாதார அலுவலர் கவிதா, மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜ கோபால், வட்டாட்சியர் ஜமுனாராணி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சி கமிஷனர் இளங்கோவன் பொறுப்பேற்றுக்கொண்டார்.

Protium

புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்

(முன்னர் குரோத் சோர்ஸ் பைனான்ஷியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு அலுவலகம்: நிர்லான் நாலெட்ஜ் பார்க் (NKP) B-2, ஏழாவது தளம், பஹாடி கிராமம், ஆப். மேற்கு விரைவு நெடுஞ்சாலை, காமா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோரேகான் (கி), மும்பை, மகாராஷ்டிரா 400063

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்று பொது மக்களுக்கும் பொதுவாகவும், கடன்தாரர் / உடன் கடன்தாரர் / அடமானதாருக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. அந்த சொத்து புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது (இனிமேல் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் என குறிப்பிடப்படும்). ஈடுபெற்ற சொத்துக்கள் மின்னணு ஏலத்தின் மூலம் "எங்கே உள்ளதோ அங்கேயே", " எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எந்த மாற்றமில்லாமல்" என்ற அடிப்படையில் விற்கப்படும். http://bankauctions.in/ என்ற இணையதளம் மூலம் பொது மின்னணு ஏலத்தை நடத்த உள்ளோம் என்று இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

1.கணக்கு எண் 2.கடன்தாரர், உடன் கடன்தாரர் 3. அடமானதாரர் பெயர்	4. கோரிக்கை அறிவிப்பு தேதி 5. 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின்படி தொகை 6. அடையாள சுவாதீனத் தேதி 7. அன்றைய தேதிமிலான தொகை	8. சொத்து/சொத்துகள் குறித்த விவரம்	9. ரிசர்வ் விலை 10.டேவனித் தொகை டெபாசிட் 11. ஏல அதிகரிப்பு தொகை (ரூபாயில்)	12. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், 13. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 14. ஆய்வுத் தேதி
1. . GS046EEL1710356, 2.(a) மோகன் மேட் ஓர்க்ஸ், சார்பில் அதன் உரிமையாளர் மாணிக்கம் மோகன், (b) மாணிக்கம் மோகன் (c) மாணிக்கம் பொன்னி (d) வீரப்பாபிள்ளை மாணிக்கம் அனைவரது முகவரி: எண் 47 77 திருவள்ளுவர் நகர், எருமபாளையம், சேலம், தமிழ்நாடு 636015 மேலும், தாதகாபட்டி சார் பதிவு அலுவலகம், சேலம் தாலுகா, எருமபாளையம் கிராமம் மறு சர்வே எண் 30/3C, சர்வே எண் 30/3D, சர்வே எண் 30/எஸ்எப் சர்வே எண். 30/3C, சேலம் – 636 015	4. தேதி: நவம்பர் 07, 2024, 5. நவம்பர் 04, 2024 அன்று ரூ.3906526.18/- (ரூபாய் முப்பத்தொன்பது லட்சத்து ஆறாயிரத்து ஐநூற்று இருபத்தாறு மட்டும்) மற்றும் நவம்பர் 04, 2024 முதல் 18% கூடுதல் வட்டியுடன் எங்கள் அறிவிப்பில் கோரப்பட்டுள்ளபடி முழுத் தொகையும் பிற கட்டணங்களுடன் செலுத்தும் வரை, இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்கள் சட்டப்பூர்வ காலத்திற்குள், 6. ஜனவரி 29, 2025, 7. மார்ச் 15, 2025 அன்று ரூ.4079256.92/- (ரூபாய் நாற்பது லட்சத்து எழுத்தொன்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்தாறு மற்றும் தொன்னூற்று இரண்டு பைசா மட்டும்)	சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தாதகாபட்டி SRO, சேலம் தாலுகா, எருமபாளையம் கிராமம் மறு சர்வே எண். 30/3Cல் உள்ள ஹெக்டேர் 0.04, சர்வே எண். 30/3Dல் உள்ள ஹெக்டேர் 0.01, சர்வே எண்.30/எஸ்எப், சர்வே எண்.257/1ல் உள்ள புஞ்சை ஹெக்டேர் 0.18.0 புஞ்சை ஏக்கர் 0.44 கிஸ்ட் 0.62. இந்த நிலத்தில் சர்வே எண்.30/3Cல் உள்ள 2757 சதுர அடி, சர்வே எண். 30/3Dல் உள்ள 168 சதுர அடி மற்றும் சர்வே எண்.30/3Eல் உள்ள 505 சதுர அடி, மொத்தம் 3430 சதுர அடி நிலம் மற்றும் பாதை உரிமைகள் மற்றும் பிற உரிமைகள் உட்பட மற்றும் அதன் எல்லைகள் மற்றும் விஸ்தீரணம் வருமாறு: வடக்கு: 6 அடி சாலை மற்றும் கலாம் சொத்து, கிழக்கு: கோவிந்தன் சொத்து, தெற்கு: எருமபாளையம் பிரதான சாலை, மேற்கு: எருமபாளையம் பிரதான சாலை. அனைத்து மாமூல் பாதை மற்றும் அனைத்து உரிமைகளுடன் கூடிய 3430 சதுர அடி நிலம் எருமபாளையம் பஞ்சாயத்தின் எல்லைக்குள் எருமபாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது. துணை பிரிவு சர்வே எண். 30/3C1, 30/3D2, 30/3E2.	9. ரூ.41,00,000/- (நாற்பத்தொரு லட்சம் மட்டும்) 10. ரூ.4,10,000/- (நான்கு லட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) 11. (ஏலம் அதிகரிப்பு மதிப்பு: ரூ.5,000/-)	12. 16 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்) 13. 15 ஏப்ரல் 2025 அன்று மாலை 5:00 மணி வரை. 14. 4 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை

1. ஆர்வமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் https://bankauctions.in & https://protium.co.in/ என்ற இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்கள், உதவி, நடைமுறை மற்றும் மின்னணு ஏலம் குறித்த ஆன்லைன் பயிற்சிக்கு, வருங்கால ஏலதாரர்கள் திரு. நிதேஷ் டி பவார் அவர்களை தொலைபேசி எண். 8142000725/ 8142000066.email id: nitesh@bankauctions.in / info@bankauctions.in-ல் தொடர்பு கொள்ளலாம்.

• விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, மின்னணு ஏலத்தில் பங்கேற்க https://bankauctions.in மற்றும் https://protium.co.in/ ஐப் பார்க்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8(6)/ விதி 9 (1)ன் கீழ் இது ஒரு சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு ஆகும்,

தேதி : 16.03.2025
இடம் : சேலம், தமிழ்நாடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
புரோடியம் ஃபைனான்ஸ் லிமிடெட்